RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்






## 'மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன்' : முதல்வர் ஸ்டாலின்



சென்னை: ஜூலை.23-

முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், "மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன்!" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன். #உங்களுடன்_ஸ்டாலின் முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா, நேற்றுவரையில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை தீர்வுகாணப்பட்டவை எத்தனை உள்ளிட்ட விவரங்களைத் தலைமைச் செயலாளரிடம் கேட்டறிந்து, மக்களின் மனுக்கள் மீது தீர்வு காண்பதில் எந்தவிதமான தொய்வும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை நடைபயிற்சி மேற்கொண்டபோது, அவருக்கு தலைசுற்றல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அதனை சமாளித்துக் கொண்ட முதல்வர், திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், அதிமுக முன்னாள் எம்.பி அன்வர் ராஜா. திமுகவில் இணையும் நிகழ்வில் பங்கேற்றார்.

இந்நிலையில், தலைசுற்றல் தொடர்ந்து இருந்து வந்ததால், சென்னை ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். முதல்வரின் உடல் நிலையைப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சைகளை மருத்துவர்கள் அளித்து வருகின்றனர். அதோடு, முதல்வரின் உடல்நிலை குறித்து அப்போலோ மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், அவர் மூன்று நாட்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசு கல்லூரிகளில் 574 தற்காலிக கவுரவ விரிவுரையாளர்கள் நியமனம்



சென்னை, ஜூலை.23-

உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் நடப்புக் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஏழை மாணவர்கள் அனைவருக்கும் சமமான உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் முதல்வரின் ஆணையின்படி இந்த ஆண்டு புதிதாக 15 அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அக்கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரிகளில் நிரந்தர ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க 574 கவுரவ விரிவுரையாளர்களை பணியமர்த்த முதல்வர் ஆணையிட்டுள்ளார். கவுரவ விரிவுரையாளர் பணியிடங்களை உரிய கல்வித்தகுதி உடையவர்களை கொண்டு வெளிப்படைத் தன்மையயுடன் நிரப்ப கல்லூரி கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கவுரவ விரிவுரையாளர் பதவிக்கு www.tngasa.org என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். 34 பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 574 பணியிடங்களின் விவரங்கள் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. உரிய தகுதியுடையவர்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தை பயன்படுத்தி ஆக.4ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தமிழக அரசின் நெறிமுறைகளை பின்பற்றியும் கல்வித்தகுதி, நேர்முகத் தேர்வு மதிப்பீடுகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு அமைச்சர் கூறியுள்ளார்.

தற்காலிக கவுரவ விரிவுரையாளர் பணிநியமனத்துக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவை சென்னை ராணி மேரி கல்லூரியில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது உயர்கல்வி அமைச்சர் கோவி.செழியன் தொடங்கிவைத்தார். அப்போது கல்லூரி கல்வி ஆணையர் ஏ.சுந்தரவல்லி, ராணிமேரி கல்லூரியின் முதல்வர் உமா மகேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.

## "நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பேன்" சென்னை உயர் நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி



சென்னை: ஜூலை.23-

சென்னை உயர் நீதிமன்றத்தின் மரபை உறுதி செய்யும் வகையில், தலைமை நீதிபதியாக அல்லாமல், பணிவான சேவகனாக பணியாற்றி நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதாக, புதிய தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா உறுதி அளித்தார்.

புதிய தலைமை நீதிபதி எம் எம் ஸ்ரீவஸ்தவாவுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. புதிய தலைமை நீதிபதியை வரவேற்று பேசிய தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பி எஸ் ராமன், தமிழக த்தின் பெருமைகளையும் சென்னையின் வளமையையும் 163 ஆண்டு பழமையான உயர் நீதிமன்றத்தின் தொன்மையையும், தமிழின் பெருமையையும் விளக்கி, நீதி பரிபாலனத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதி அளித்தார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் வழக்கறிஞர்கள் பாதுகாப்பு சட்டம் கொண்டுவர காரணமாக இருந்த தலைமை நீதிபதி மூலமாக தமிழகத்திலும் இந்த சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கை நிறைவேற்றப்படும் என நம்புவதாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்க தலைவர் மோகன கிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதே போல பல்வேறு வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் புதிய தலைமை நீதிபதி வரவேற்று பேசினர். பின்னர் ஏற்புரையாற்றிய தலைமை நீதிபதி எம் எம் ஸ்ரீ வஸ்தவா, 1892 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தின் சாவியை பெற்றுக்கொண்ட அப்போதைய தலைமை நீதிபதி சர் ஆர்தர் கோலன், எந்த பாகுபாடும் இல்லாமல் நீதி நிர்வாகம் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டு இருந்தார். அந்த மரபை உறுதி செய்யும் வகையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அல்லாமல் சேவகனாக பணியாற்றி நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதாக உறுதி அளித்தார்.

மக்களின் உரிமைகளை பாதுகாக்க, திறமையான வெளிப்படைத் தன்மையுடன் நீதி நிர்வாகம் நடத்தப்படும் என்றும், வழக்கறிஞர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பணியாற்றுவதாகவும் உறுதி தெரிவித்தார்.

# அரசு திட்ட பயனாளிகளை கட்டாயப்படுத்தி திமுகவில் உறுப்பினர் சேர்க்கை: பழனிசாமி குற்றச்சாட்டு



திருவாரூர்: ஜூலை.23-

திமுக அறிவித்துள்ள 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபடும் கட்சியினர், 100 நாள் வேலை திட்டப்பயனாளிகள் மற்றும் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளை கட்டாயப்படுத்தி கட்சியில் சேர்த்து வருவதாக அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பிரச்சாரப் பயணம் மேற்கொண்டுள்ள அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி பெரியார் சிலை அருகே பேசியதாவது: மேகேதாட்டுவில் அணை கட்ட அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு கர்நாடக காங்கிரஸ் அரசு திட்ட அறிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

ஆனால், தமிழகத்தைச் சேர்ந்த 39 எம்.பி.க்களும் மக்களவையில் இதுகுறித்துப் பேசாமல் மக்களவைக்கு சென்று பெஞ்சை தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தியிடம் எடுத்துச் சொல்லி, மேகேதாட்டுவுக்குப் பதிலாக ராசி மணலில் அணை கட்ட கர்நாடக அரசுக்கு அறிவுறுத்த சொல்லலாம். ஆனால், அதையெல்லாம் திமுக அரசு செய்யவில்லை.

ஓரணியில் தமிழ்நாடு என்று கூறி திமுகவினர் வீடுவீடாகச் சென்று கதவைத் தட்டி உறுப்பினர் சேர்க்கையை நடத்தி வருகின்றனர். இதற்காக, 100 நாள் வேலை திட்டப் பணியாளர்கள், முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள், மகளிர் உரிமைத் தொகை பெறுபவர்களிடம் கட்டாயப்படுத்தி உறுப்பினர் சேர்க்கை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்வுக்கு (தேர்தலுக்கு) நான் தற்போதே படித்து வருவதாக எனது இந்தப் பிரச்சார பயணம் குறித்து திருமாவளவன் விமர்சித்துள்ளதோடு, அவர் அன்றைய தினமே படித்து தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று விடுவேன் என்றும் கூறியுள்ளார்.

இதுபோன்று கூறுவதன் மூலம் மாணவர்களை அவர் தவறாக வழி நடத்த வேண்டாம். மாணவர்கள் அன்றைய பாடங்களை அன்றைய தினமே படித்து வருகின்றனர். அதைப்போல, நான் மக்களை சந்திப்பது தவறு அல்ல. மக்களை சந்தித்தால் தான் ஆட்சிக்கு வந்த பின்னர், அவர்களது பிரச்சினைகளை அறிந்து செயலாற்ற முடியும். தமிழகத்தில் போதைக் கலாச்சாரம் அதிகரித்து வந்ததை நான் 3 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்தேன்.

தற்போது இந்த போதைப் பொருட்கள் நடமாட்டம் காரணமாக சிறுமிகள் முதல் மூதாட்டிகள் வரை பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மணல் கொள்ளையை தட்டிக்கேட்பவர்கள் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். அதிமுக ஆட்சி வந்தவுடன், தவறு செய்கின்ற அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

முதல்வர் நலம்பெற பிரார்த்தனை: தொடர்ந்து அவர் பேசும்போது, ''முதல்வர் ஸ்டாலின் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்தி அறிந்தேன். அவர் பூரண உடல்நலம் பெற பிரார்த்தனை செய்கிறேன்'' என்றார்.

## தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் சுய உதவி குழுவினர் 2.50 கோடி பேருக்கு ரூ.1.21 லட்சம் கோடி வங்கி கடனுதவி

சென்னை: ஜூலை.23-

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் சுயஉதவி குழு பெண்கள் 2.50 கோடி பேருக்கு ரூ.1.21 லட்சம் கோடி வங்கி கடனுதவி வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்துள்ளது. மகளிர் சுயஉதவி குழுக்களின் பொருளாதார தேவையை கருத்தில் கொண்டு, அவற்றின் செயல்பாடுகளுக்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் வங்கி கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த 2021-22ம் நிதி ஆண்டில் 4.08 லட்சம் குழுக்களுக்கு ரூ.21,392 கோடியும், 2022-23ம் நிதி ஆண்டில் 4.49 லட்சம் குழுக்களுக்கு ரூ.25,642 கோடியும், 2023-24ம் நிதி ஆண்டில் 4.79 லட்சம் குழுக்களுக்கு ரூ.30,074 கோடியும் வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டன. அதை தொடர்ந்து, கடந்த 202425ம் நிதி ஆண்டில் 4.84 லட்சம் குழுக்களுக்கு ரூ.35,189 கோடி கடன் வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்தது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பு 2025-26ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில், சுயஉதவி குழு மகளிருக்கு ரூ.37 ஆயிரம் கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி, நடப்பு ஆண்டில் கடந்த ஜூலை 18ம் தேதி வரை 1.04 லட்சம் சுயஉதவி குழுக்களை சேர்ந்த 13.58 லட்சம் மகளிருக்கு ரூ.9,113 கோடி வங்கி கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், திமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் மொத்தமாக 19.26 லட்சம் சுயஉதவி குழுக்களை சேர்ந்த 2.50 கோடி மகளிருக்கு ரூ.1.21 லட்சம் கோடி வங்கி கடன் இணைப்புகளை வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

## 24வது ஆண்டு நினைவு தினம்: நடிகர் சிவாஜி கணேசனுக்கு அரசியல் தலைவர்கள் மரியாதை



சென்னை: ஜூலை.23-

நடிகர் சிவாஜி கணேசனின் நினைவு தினத்தையொட்டி அவரது படத்துக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நிலையில், காங்கிரஸ் கட்சியினர் அன்னதானம் வழங்கினர்.

நடிகர் சிவாஜி கணேசனின் 24வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி சென்னை அடையாறில் உள்ள சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் சிவாஜியின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, அதன் அருகே அவரது படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

சிவாஜி கணேசனின் மகனும், நடிகருமான பிரபு, அவரது மகன் விக்ரம் பிரபு உடன் வருகை தந்து சிவாஜி கணேசனின் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பாஜக மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன் மரியாதை செலுத்தினார்.

சிவாஜி கணேசனின் நினைவு தினத்தை முன்னிட்டு சத்தியமூர்த்தி பவனில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்துக்கு தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் கிருஷ்ணசாமி, கே.வி.தங்கபாலு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து காங்கிரஸ் கலைப் பிரிவு சார்பில் சிறப்பு அன்னதானமும் சத்திய மூர்த்தி பவனின் நேற்று வழங்கப்பட்டது.

இதற்கிடையே சிவாஜி கணேசனின் நினைவுதினம் குறித்து அரசியல் தலைவர்கள் வெளியிட்ட செய்திகளில் கூறியிருப்பதாவது:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: நடிப்பின் இலக்கணம், தான் ஏற்றக் கதாபாத்திரங்களாகவே வாழ்ந்து கோடிக்கணக்கான ரசிகர்களை ஈர்த்த திரை ஆளுமை சிவாஜி கணேசனின் நினைவு நாளில், தமிழ்த் திரையுலகில் அவர் நிகழ்த்திய காலத்தால் அழியா சாதனைகளை நினைவு கூர்கிறேன்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: இந்திய விடுதலைக்கு பிறகு சுதந்திரப் போராட்டத்தில் நம்முடைய முன்னோர்கள் செய்த தியாகத்தை அடுத்த தலைமுறைகளுக்கு திரையின் மூலம் வெளிப்படுத்திய மாபெரும் கலைஞர் சிவாஜி கணேசனின் நினைவை இந்நாளில் போற்றுவோம்.'

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை: கலைத்திறமையால் தமிழ்த் திரைகை உலக அளவில் கொண்டு சேர்த்தவர், விருதுகளுக்கு பெருமை சேர்த்த சிம்மக் குரலோன் சிவாஜி கணேசனின் நினைவை போற்றி வணங்குவோம்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்: தமிழ்ப் பேரினத்தின் பெருமைமிகு கலை அடையாளம் சிவாஜி கணேசன். தன்னிகரற்ற நடிப்பாற்றலால் தமிழர்களின் கலைத்திறனை தரணிக்கு காட்டிய தனிப் பெருங்கலைஞன் பெரும் புகழை போற்றுவோம்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: உடல்மொழியாலும், உணர்வுப்பூர்வமான வசன உச்சரிப்பாலும் நாட்டு மக்கள் மனதில் தனக்கென தனி சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் நடிப்பு சக்கரவர்த்தி சிவாஜி கணேசனை எந்நாளும் நினைவில் வைத்து போற்றுவோம்.

# புதிய சார் பதிவாளர் அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் அடிக்கல் நாட்டினார்



மானாமதுரை ஜூலை 23

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி மற்றும் மானாமதுரை நகராட்சி பகுதிகளில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பொதுப்பணித்துறை ஆகியவைகளின் சார்பில், கட்டப்படவுள்ள புதிய சார் பதிவாளர் அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை நேற்று (22.7.2025) மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில், தமிழகத்தில் அரசின் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட்டு, கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்டவைகள் அனைத்தும், அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கப்பெற செய்யும் வகையில், சிறப்பான நிர்வாகம் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அத்திட்டங்களின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகளும் தமிழக முழுவதும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் எவ்வித பாகுபாடின்றி, பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்களுக்கான திட்டங்களை உரிய முறையில் கொண்டு சேர்க்கும் அரசுத்துறைகளை சார்ந்த அலுவலகங்கள் பல்வேறு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்திட வேண்டும் என்ற அடிப்படையிலும், சொந்த கட்டிடத்தில் இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அதற்கென தமிழ்நாடு முதலமைச்சர் துறை ரீதியாக நிதி ஒதுக்கீடு செய்தும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில், 2024 2025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, சட்டமன்றப் பேரவையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் ” பதிவுத்துறைக்கு சொந்தமான 36 சார்பதிவாளர் அலவலவகங்களுக்கு ரூ.100 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும்” என அறிவிக்கப்பட்டது.

சிவகங்கை பதிவு மாவட்டத்தில் திருப்புவனம் மற்றும் மானாமதுரை பகுதியில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இன்றையதினம் புதிய சார் பதிவாளர் கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி, திருப்புவனம் சார் பதிவாளர் அலுவலகமானது, திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் 434.20 சதுரமீட்டர் அளவில் (தரைத்தளம் மற்றும் முதல்தளம்) ரூ.215.00 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மானாமதுரை சார் பதிவளார் அலுவலகமானது, மானாமதுரை நகராட்சி பகுதியில் 380.00 சதுர மீட்டர் அளவில் ரூ.185.90 இலட்சம் மதிப்பீட்டிலும் என 2 புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் மொத்தம் ரூ.400.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், பதிவிற்கான ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும்,கூடுதல் வசதிகளுடன் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சி மற்றும் மானாமதுரை நகராட்சி ஆகிய பகுதிகளில் புதிய இரண்டு சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருக்கும் இப்பகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.


மேலும், இக்கட்டுமானப் பணிகளை 7 மாதகால ஒப்பந்த அடிப்படையில் முடித்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இப்பணிகளை 5 மாதகாலத்திற்குள் விரைந்து, தரமான முறையில் முடிக்கப்பெற்று, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது போன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான திட்டங்கள் தமிழகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் திட்டப்பயன்களை பெறுவதற்கு அரசை நாடி வந்த நிலையில், அதனை மாற்றி மக்களுக்கு பயனுள்ள வகையில், மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ”உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தினை அறிவித்து,

பொதுமக்களின் தேவையை நிவர்த்தி செய்வதற்கென அந்தந்த பகுதிகளில் முகாம்களை நடத்தி, தகுதியான பயனாளிகளுக்கு உரிய பயன்களை உடனடியாக வழங்குவதற்கு வழிவகை ஏற்படுத்தி, பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள். பிற மாநிலங்களும் தமிழக அரசின் திட்டங்களை பின்பற்றிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்கு பார்வையுடன் அரசின் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் சோ. மாரியப்பன் கென்னடி, நகர மன்றம் துணைத் தலைவர் பாலசுந்தர் ,பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் இளங்கோவன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட பதிவாளர்கள் வி.ரமேஷ் (நிர்வாகம் சிவகங்கை) மற்றும் கிருஷ்ணமூர்த்தி (தணிக்கை), சார் பதிவாளர்கள் மீனாட்சி சுந்தரம் (திருப்புவனம்), மகாலட்சுமி (மானாமதுரை), மானாமதுரை நகராட்சி ஆணையாளர் (பொ) கிருஷ்ணராம், மானாமதுரை நகர்மன்ற துணைத்தலைவர் சே.பாலசுந்தர் திருப்புவனம் பேரூராட்சி துணைத்தலைவர் அ.ரகமத்துல்லாகான், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வான்மதி, வட்டாட்சியர்கள் விஜயகுமார் (திருப்புவனம்) மற்றும் கிருஷ்ணகுமார் (மானாமதுரை) மானாமதுரை முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை முன்னாள் துணைத் தலைவர் முத்துசாமி, திமுக ஒன்றிய செயலாளர்கள் துரைராஜாமணி அண்ணாதுரை, திமுக நகரச் செயலாளர் பொன்னுசாமி,உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





# மதுரை மாநகராட்சி மீண்டும் சர்ச்சையில்! தனிநபர் சொத்துக்களை ஆக்கிரமிப்பு

மதுரை, ஜூலை.23-

மதுரை புதூர் கற்பக நகர் பகுதியில் வசித்து வரும் பழனியப்பன் என்பவரின் தந்தை வீரப்பன் அவரது மனைவி மீனாட்சி, அவரது நண்பர் செண்பக ராஜா ஆகிய மூன்று நபர்களும் 1992 ஆம் ஆண்டு மதுரை மதிச்சியம் வடக்குத்தெரு பகுதியில் உள்ள சர்வே எண்: 379 1A யில் உள்ள 12,097 சதுர அடி நிலத்தை நாராயண ஐயங்காரின் பேரன் கண்ணனிடம் இருந்து கிரையம் பெற்றனர், இந்நிலையில் அப்பகுதி மாநகராட்சிக்கு சொந்தமான புறம் போக்கு பகுதி என சம்மந்தப்பட்டவர்கள் மீது மாநகராட்சி மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தது, 1992 ஆம் ஆண்டிலிருந்து இவ்வழக்கை வீரப்பன் நடத்தி வருகின்ற இடையில் அவரது மனைவி மீனாட்சி மரணம் அடைந்ததால், அவரது நண்பர் செண்பக ராஜாவும் வழக்கை தொடர முடியாமல் வீரப்பன் மகன் பழனியப்பனுக்கு பவர் ஆப் அட்டர்னி வழங்கினார், ஆகையால் பழனியப்பன் தொடர்ந்து அந்த வழக்கை நடத்தி வந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு மதுரை மாவட்ட நீதிமன்றம், கோர்ட் அமினா முன்னிலையில், காவல்துறை பாதுகாப்புடன் 2,430 சதுர அடி நிலத்தை பழனியப்பனிடம் ஒப்படைத்தது, அதனைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு கோர்ட் அமீனா முன்னிலையில் காவல்துறை பாதுகாப்புடன் 5040 சதுர அடி நிலத்தை பழனியப்பன் வசம் ஒப்படைத்தது, அந்த தீர்ப்பை எதிர்த்து 2023 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி மேல் முறையீடு செய்தது, வழக்கின் விசாரணையில் நீதிமன்றம் அப்பகுதி மாநகராட்சிக்கு சொந்தமான பகுதி என்றால் அதற்குரிய ஆவணங்களை நான்கு வாரங்களில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது, ஆனால் இரண்டு வருடங்களாகியும் இன்று வரைமதுரை மாநகராட்சி அதற்கான ஆவணங்களை சமர்பிக்க வில்லை என்று, நேற்று பழனியப்பன் அவரது வழக்கறிஞர் காளிமுத்து ஆகியோர் தங்களது பகுதியில் தகர செட்டு அமைத்து வந்த நிலையில், அப்பகுதி பொதுமக்களும், மாநகராட்சி ஊழியர்களும் இப்பகுதி மாநகராட்சிக்கு சொந்தமான புறம்போக்கு பகுதி என்றும் இதற்கான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் தகராறில் ஈடுபட்டனர், செய்தி தெரிந்து வந்த மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது, தீர்ப்பு வரும் வரை காத்து இருங்கள், இல்லை என்றால் யாரிடம் உரிய ஆவணங்கள் உள்ளதோ அவர்கள் இதற்கான துறை சார்ந்த அலுவலர்களை நேரில் வர சொல்லி அதற்கான தீர்வை காணுங்கள் என்று இருதரப்பிடமும் சமசரச பேச்சு வார்த்தை நடத்தினார் அதன்பின்னர் பொதுமக்கள் கலைந்து சென்றனர், இதனால் அப்பகுதி சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.





# தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 3வது மண்டலத்தில் சிட்லபாக்கம் 43வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

தாம்பரம், ஜூலை.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 3வது மண்டலத்தில் சிட்லபாக்கம் 43வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

இந்த முகாமை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்.எஸ். ஆர்.ராஜா. அவர்கள் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து நல திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, ஆணையர் பாலச்சந்திரன் இ.ஆ.ப., துணை மேயர். கே.காமராஜ், மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ஜெகன். தாம்பரம் மாநகர மகளிர் தலைவர் பரிமளா சிட்டிபாபு மற்றும் அரசு அதிகாரிகள வட்ட செயலாளர், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுநலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் 775 விண்ணப்பங்கள் பெரப்பட்டது, 225 விண்ணப்பங்கள் உங்களுடன் ஸ்டாலின் பதிவில் ஏற்றப்பட்டது, 13 விண்ணப்பங்கள் துறை சார்ந்த பதிவுகளில் ஏற்றப்பட்டது மீதம் பரிசீலனையில் உள்ளது.



# ஆடி அமாவாசையை முன்னிட்டு சென்னை ராமேசுவரத்துக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை, ஜூலை.23-

ஆடி அமாவாசையை முன்னிட்டு, சென்னை மற்றும் பிற இடங்களில் இருந்து ராமேசுவரத்துக்கு சிறப்பு பேருந்துகள் நாளை இயக்கப்பட உள்ளன. தமிழகம் மற்றும் அண்டை மாநிலமான பெங்களூரில் இருந்து பொதுமக்கள் ராமேசுவரத்துக்கு சென்று, தங்களின் முன்னோர்களுக்கு தர்ப்பணம் மற்றும் திதி வழங்குவார்கள். இதன்படி, ஆடி அமாவாசை தினத்தில் ராமேசுவரத்துக்கு அதிக அளவில் மக்கள் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் அடிப்படையில், சென்னை, சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து ராமேசுவரத்துக்கு நாளை (ஜூலை 23) கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. மறுமார்க்கமாக, ராமேசுவரத்தில் இருந்து சென்னை, சேலம், கோயம்புத்தூர், பெங்களூருக்கு கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

இருமார்க்கத்திலும் சேர்த்து மொத்தம் 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இதற்காக, www.tnstc.in மற்றும் tnstc official app மூலமாக முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கத்தை கண்காணிக்க குறிப்பிட்ட பேருந்து நிலையங்களில் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகவல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கன்னியாகுமரியில் மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வசந்த் - கோ சார்பில் ‘வசந்த் அவார்ட் 2025 வழங்கும் நிகழ்ச்சி

கன்னியாகுமரி, ஜூலை.23-

இந்தியாவின் நம்பர் ஒன் டீலர் வசந்த் அன் கோ பல்வேறு சமூக நலப் பணிகளை செய்து வருகிறது இளைஞர்களின் வேலை வாய்ப்பு முகாம் நடத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது.

இதை போல் மாவட்டத்தில் 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு ஆண்டு தோறும் விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது, கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற நிகழ்வில் 10 மற்றும் 12 வகுப்பு பொதுத் தேர்வில் அனைத்து பள்ளிகளிலும் முதலிடம் இடம் பிடித்த சுமார் 1500 க்கு மேற்பட்ட மாணவிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டது இதை போல் இந்த ஆண்டு 2024-25 ஆம் ஆண்டு கல்வி ஆண்டிற்கான மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளில் 10 வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் முதலிடம் பிடித்த 500 மேற்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த குமாரகோவில் நூரூல் இஸ்லாம் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் வசந்த் அன் கோ பங்குதாரரும், குமரி பாராளுமன்ற உறுப்பினருமான விஜய் வசந்த் கலந்து கொண்டு முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்

இந்நிகழ்ச்சியில் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழக சிறப்பு விருந்தினர்கள் டாக்டர் ஜனார்தனன், டாக்டர் ஷாஜுன், டாக்டர் திருமாவளவன் கலந்து கொண்டனர். இறுதியில் வசந்த் குழுமம் செயலாளர் பேராசிரியர் சரவணன் நன்றியுரையாற்றினார்.

# தாட்கோ மற்றும் டால்மியா பாரத் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீட்டு சுகாதார உதவியாளர் பயிற்சி வழங்கப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்




சிவகங்கை, ஜூலை.23-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் டால்மியா பாரத் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீட்டு சுகாதார உதவியாளர் (Home Health Aide) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அதன்படி தற்போது, பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாகவும், 18 முதல் 35 வயதுவரை உள்ளவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிக்கான கால அளவு இரண்டு மாதம் ஆகும்.

இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்புடன் ஆரம்பகால மாத ஊதியமாக ரூ.15,000/ முதல் ரூ.17000/ வரை கிடைக்க வழிவகை செய்யப்படும். மேலும், சென்னையில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும்.

எனவே, மேற்பட்ட இப்பயிற்சியினை பெற விரும்பும் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர் இளைஞர்கள் தாட்கோ இணையதளமான www.tahdco.com <http://www.tahdco.com/> என்ற முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# புத்த, சமண மற்றும் சீக்கிய மதத்தினர் புனித பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பயன்பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.23-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 50 புத்த மதத்தினர், 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர், இந்தியாவில் உள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள தமிழக அரசால் ஆண்டுதோறும் நபர் ஒருவருக்கு ரூ.10,000/ வீதம் 120 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சம் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு, பயன்பெற விரும்பும் புத்த, சமண மற்றும் சீக்கியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இப்புனித பயணமானது புத்த மத தொடர்புடைய 1. பீகாரில் உள்ள புத்த கயா, 2. உத்திரப்பிரதேசத்தில் உள்ள குசிநகர், 3. வாரணாசியில் உள்ள சாரநாத் கோவில், 4. பீகாரில் உள்ள ராஜ்கிர், வைஷாலி, 5. நேபாளத்தில் உள்ள லும்பினி போன்ற புனித தலங்களையும், சமண மத தொடர்புடைய 1.இராஜஸ்தானில் உள்ள தில்வாரா கோவில், ரணக்பூர் சமண கோவில், ஜெய் சால்மர் சமண கோவில், 2. ஜார்கண்டில் உள்ள சிக்கர்ஜி, 3. குஜராத்தில் உள்ள பாலிடனா, 4. பீகாரில் உள்ள பவபுரி சமண கோவில் போன்ற இடங்கள், 5. கர்நாடகாவில் சரவண பெலகோலா போன்ற புனித தலங்களையும் மற்றும் சீக்கிய மத தொட ர்புடைய 1. பஞ்சாப்பில் உள்ள அமிர்த ரசஸ், தக்ட் ஸ்ரீகேசகர் சாகிப், தக்ட் ஸ்ரீடாம்டமா சாகிப், 2. பீகாரில் உள்ள தக்ட் ஸ்ரீ ஹர்மந்திர் சாகிப் (குரு கோவிந்த் சிங்), தக்ட் ஸ்ரீ ஹசூர் சாகிப், (மஹாராஷ்டிரா) போன்ற இடங்கள், 3. பாகிஸ்தானிலுள்ள குருத்வாரா ஸ்ரீ நான்காணா சாகிப், குருத்வாரா ஸ்ரீ தெஹ்ரா சாகிப் போன்ற புனித தலங்களையும் உள்ளடக்கியதாகும். மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் கடந்த 01.07.2025 ஆம் தேதிக்கு பிறகு புனித பயணம் மேற்கொள்பவர்களுக்கு ணிசிஷி முறையில் நேரடியாக மானியம் வழங்கப்படவுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/ சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். அதுமட்டுமன்றி, www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். எனவே, விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை வருகின்ற 30.11.2025ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வைத்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.





# நாகர்கோவில் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 200 கிலோ குட்கா பறிமுதல்

கன்னியாகுமரி, ஜூலை.23-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கோட்டார் கீழசரக்கல்விளை பகுதியில் உள்ள கனகராஜ் என்பவரின் வீட்டில் குட்கா புகையிலை பதுக்கி வைக்கப்பட்டு இருப்பதாக கோட்டார் போலீசுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து காவல் உதவி ஆய்வாளர் திலிபன் தலைமையில் போலீசார் அந்த வீட்டில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு சாக்கு மூட்டைகளில் குட்கா புகையிலை பதுக்கி வைக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது அங்கிருந்த 200 கிலோ குட்கா புகையிலையை போலீசார் பறிமுதல் செய்தனர். வீட்டின் உரிமையாளர் தலைமறைவு காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



# காட்பாடியில் அரசு நலதிட்ட விழா: நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றி நலதிட்டங்களை வழங்கினார்

வேலூர், ஜூலை.23-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்தி நகர், தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1336 பயனாளிகளுக்கு ரூ. 22.48 கோடி மதிப்பில் நலதிட்ட உதவிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு. தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், பொதுமக்கள், பயனாளிகள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் அடுத்த வெங்கடாபுரம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஜூலை.23-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த வெங்கடாபுரம் ஊராட்சியில் தனியார் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், ஊராட்சி மன்ற தலைவர் பாபு தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர் வின்சென்ட் மற்றும் வட்டாட்சியர் வடிவேல் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். இந்நிகழ்வின் போது பாலமதி ஊராட்சி மன்ற தலைவர் சுதா சரவணன், ஊராட்சி செயலர்கள் பாஸ்கரன், முகிலன், பெருமாள், யுவராஜ், பாலமுருகன் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களுக்கு பதிலாக, மறுசுழற்சி செய்யக்கூடிய மக்கும் பொருட்களை பயன்படுத்தி வரும் உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளுக்கு, தமிழக அரசின் சார்பில் பரிசு தொகை மற்றும் கேடயம் வழங்கப்படவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.23-

அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களுக்கு பதிலாக, மறுசுழற்சி செய்யக்கூடிய மக்கும் பொருட்களை பயன்படுத்தும் உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளை ஊக்குவிக்கின்ற வகையில், தமிழக அரசின் சார்பில் பரிசுத்தொகை மற்றும் கேடயம் வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களின் சட்டப் பேரவை அறிவிப்பு எண். 77/202526ன்படி, உணவு வணிகம் செய்பவர்கள் தடை செய்யப்பட்ட நெகிழி பைகளை பயன்படுத்தாமல் மாற்று வழிகளை மேற்கொள்வதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மீண்டும் மஞ்சள்பை 2021 அறிவிப்பை பலப்படுத்தும் வகையிலும், தடை செய்யப்பட்ட நெகிழி பயன்படுத்தாமல் மாற்று வழிகளை பயன்படுத்தி வரும் உணவு வணிகர்களுக்கு தமிழக அரசின் சார்பில் பரிசு தொகை மற்றும் கேடயம் வழங்கும் அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்பாக செயல்படும் உரிமம் பெற்ற உணவு வணிகருக்கு ரூ. 1,00,000/மும், பதிவு சான்றிதழ் பெற்ற உணவு வணிகருக்கு ரூ.50,000/மும் பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இதற்கென சிறப்பு குழு அமைத்து உணவு வணிகர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

மேலும், உணவு வணிகர்கள் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் பரிசு தொகை மற்றும் கேடயம் பெறுவதற்கான விண்ணப்பத்தை வட்டார / நகர் உணவு பாதுகாப்பு அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். உணவு வணிகர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தளம், அறை எண். 239ல் செயல்பட்டு வரும் உணவு பாதுகாப்புத்துறையின் மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் வருகின்ற 31.08.2025 ஆம் தேதிக்குள் சமர்ப்பித்திடல் வேண்டும்.

கூடுதல் விபரங்களுக்கு 04575 243725 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது dofssasvg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 23.7.2025 அன்று

# காரைக்குடி மாநகராட்சி மற்றும் சிவகங்கை, காளையார்கோவில், திருப்புவனம், மானாமதுரை, எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை ஜூலை.23-

சிவகங்கை மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 23 ஆம் தேதி காரை க்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 19,25,26 ஆகிய பகுதிகளுக்கென அமராவதி மஹாலிலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென மேலப்பூங்குடி சமுதாய க்கூடத் திலும், காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென முத்தூர் வாணியங்குடி சமுதாயக்கூடத்திலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென ஏனாதி, விக்ரம் பொறியியல் கல்லூரி வளாகத்திலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென பெரியகோட்டை சமுதாயக் கூடத்திலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளுக்கென புழுதிப்பட்டி சமுதாயக் கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.




மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப் படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## வருகின்ற 18.07.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டமானது,

# நிர்வாக காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு, வருகின்ற 25.07.2025 அன்று நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.23-

வருகின்ற 18.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டமானது, நிர்வாக காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு, வருகின்ற 25.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

மேலும், சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 25.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



# சபரிமலையில் வரும் 30ம் தேதி நிறைபுத்திரி சிறப்பு வழிபாடு: தரிசன முன்பதிவுகள் தொடங்கின

தேனி, ஜூலை.23-

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வரும் 30ம் தேதி நிறைபுத்திரி சிறப்பு வழிபாடு நடைபெற உள்ளது. இதற்காக புதிய நெற்கதிர்கள் ஆபரணப்பெட்டியில் வைத்து தலைச்சுமையாக சபரிமலைக்கு கொண்டு வரப்பட உள்ளது. இந்த வழிபாட்டுக்காக தற்போது ஆன்லைன் தரிசனம் முன்பதிவுகள் தொடங்கி உள்ளன.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மாதாந்திர பூஜைக்காக கடந்த 16ம் தேதி மாலை நடை திறக்கப்பட்டது. 5 நாள் தொடர் வழிபாட்டுக்குப் பிறகு நேற்று (ஜூலை 21) இரவு நடைசாத்தப்பட்டது. இந்நிலையில் நிறைபுத்திரி தரிசனத்துக்காக வரும் 29ம் தேதி மாலை நடைதிறக்கப்பட்டு 30ம் தேதி ஒருநாள் வழிபாடு நடைபெற உள்ளது. இந்நாளில் புதிய நெற்கதிர்கள் ஐயப்பன் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்படும். பின்பு அவை பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

தேவசம்போர்டு அதிகாரிகள் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் நெல் அறுவடை பருவத்தில் இந்த பூஜை நடைபெறும். விவசாயம் செழிக்கவும், நாட்டின் வளம் பெருகவும் இந்த வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக திருவிதாங்கூர் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான செட்டிகுளக்கரையில் உள்ள வயல்களில் விளைந்த நெற்கதிர்கள் அச்சன்கோயிலுக்கு கொண்டு வரப்படும். அங்கு சிறப்பு பூஜைகளுக்குப் பிறகு சபரிமலை சந்நிதானத்துக்கு தலைச்சுமையாக எடுத்துச் செல்லப்படும்.

இந்த நெற்கதிர் கட்டுகள் பட்டு வஸ்திரம் சுற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்ட திரு ஆபரணப்பெட்டியில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். பம்பை கணபதி கோயிலில் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு பின்பு பஞ்ச வாத்தியங்கள் முழங்க சந்நிதானத்துக்கு கொண்டு செல்லப்படும். அங்கு தேவசம்போர்டு அதிகாரிகள் இதனை பெற்றுக் கொள்வர்.

நெற்கதிர்கள் கருவறையில் வைத்து பூஜை செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் என்றனர்.கேரளாவில் தற்போது பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தரிசனத்துக்கு வருபவர்கள் குடை உள்ளிட்ட மழை பாதுகாப்பு உபகரணங்களை கொண்டு வர வேண்டும். நீலிமலை பாதை வழுக்கும் தன்மை உள்ளதால் சுப்பிரமணிய பாதையில் பக்தர்களை அனுமதிக்க தேவசம் போர்டு முடிவு செய்துள்ளது.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில்

# 20 பயனாளிகளுக்கு ரூ.61,140 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வழங்கினார்

சிவகங்கை, ஜூலை.23-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனா ளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்க ளிடமிருந்து 377 மனுக்க ள் பெறப் பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவில் அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர்கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளினை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற நபர்களுக்கு முதல் பரிசாக ரூ.5,000/ம், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ம், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ம் மற்றும் சிறப்பு பரிசாக ரூ.2,000/ம் என மொத்தம் 16 நபர்களுக்கு ரூ.48,000/ மதிப்பீட்டிலான பரிசுத்தொகை, சான்றிதழ்களையும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3,285/ மதிப்பீட்டிலான காதொலி கருவிகளை என ஆக மொத்தம் ரூ.61,140/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் ச.சீதாலெட்சுமி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# தென்மேல்பாக்கம் எரியூட்டு மையத்தில் ரூ.1.25 கோடி மதிப்பிலான 833.5 கிலோ கஞ்சா அழிப்பு

தாம்பரம், ஜூலை.23-

தாம்பரம் மாநகர காவல் துறையால் கைப்பற்றப்பட்ட ரூ.1.25 கோடி மதிப்பிலான கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் எரித்து அழிக்கப்பட்டது. தாம்பரம் மாநகர காவல் ஆணையரக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 55 வழக்குகளில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதையடுத்து, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மொதக் உத்தரவின்பேரில், கூடுதல் ஆணையர் மகேஸ்வரி தலைமையில், பள்ளிக்கரணை துணை ஆணையர் கார்த்திகேயன் மேற்பார்வையில், செங்கல்பட்டு அருகே சிங்கப்பெருமாள்கோவில் அடுத்த தென்மேல்பாக்கம் பகுதியில், ஜி.ஜே. மல்டி கிளேவ் எனும் மருத்துவ கழிவுகள் எரியூட்டும் நிறுவன வளாகத்தில் கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள் அழிக்கும் பணி நேற்று நடந்தது. இதில், கடந்த மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை கூடுவாஞ்சேரி மதுவிலக்கு அமலாக்க ப்பிரிவு, தாம்பரம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, பள்ளிக்கரணை மது விலக்கு அமலாக்கப்பிரிவு ஆகிய காவல்நிலையங்களில் 55 குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 833.5 கிலோ கஞ்சா எரித்து அழிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.1.25 கோடி என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், மதுவிலக்கு அமலாக்க பிரிவு உதவி ஆணையர் சத்தியசீலன், ஆய்வாளர்கள் சதீஷ், தினேஷ், ஸ்ரீதேவி மற்றும் போலீசார் உடனிருந்தனர்.



# காரைக்குடி மாநகர வர்த்தக அணி அமைப்பாளராக இரா கோ சரவணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

சிவகங்கை, ஜூலை.23-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநக ராட்சியில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை சந்திக்கும் வகையில் மாற்றங்கள் செய்து சிறப்பாக செயல்படும் திமுகவினருக்கு முக்கிய நிர்வாக பொறுப்புகளை கட்சி தலைமை அறிவித்துள்ளது. அதன்படி மாவட்டங்களில் அனைத்து சமூகத்தினருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் வகையில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நிர்வாக பொறுப் புகள் வழங்கப் பட்டுள்ளது அந்த வகையில் சிவகங்கை மாவட்டம் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான பெரிய கருப்பன் அவர்கள் பரிந்துரைப்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர வர்த்தக அணி அமைப்பாளராக இரா கோ சரவணன் அவர்களை நியமித்து திமுக தலைமை அறிவித்ததுள்ளது இதனைத் தொடர்ந்து இன்று மாநகர வர்த்தக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இரா கோ சரவணன் முன்னாள் அமைச்சர் தென்னவன், மேயர் முத்து துரை , துணை மேயர் குணசேகரன், அவைத்தலைவர் சன் சுப்பையா ஆகியோரை நேரில் சந்தித்து சாலை அணிவித்து அவர்களிடம் ஆசி பெற்றார். நிகழ்ச்சி திமுக கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழமாத்தூர், மேலமாத்தூர், கொடிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மேற்கு வட்டாட்சியர் செந்தாமரை வள்ளி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில் மணி, அழகு பாண்டி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயன், கொடிமங்கலம் ஊராட்சி செயலாளர் ரவி கிருஷ்ணன், கீழமாத்தூர் மற்றும் மேலமாத்தூர் ஊராட்சி செயலாளர் கார்த்திகேயன் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திருக்குமரன், பரவை ஆர் கே ஜெயராமன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




# 2வது மண்டலம் கீழ்கட்டளை பகுதி 20வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

கீழ்கட்டளை, ஜூலை.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 2வது மண்டலம் கீழ்கட்டளை 20வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம் பரம் மாநக ராட்சி மேயர் வசந்த குமாரி கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு முறையாக பதிவு செய்யப்பட்டுவதைப் பார்வையிட்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களுக்கான தீர்வுகளை வழங்கினார்கள் உடன் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்திரன், துணை மேயர். கே.காமராஜ், மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை, விடுதலை சிறுத்தை கட்சியின் மாமன்ற உறுப்பினர் செ.முத்துகுமார், வட்டக் கழக செயலாளர் முருகையன், மற்றும் அரசு அதிகாரிகள வட்ட செயலாளர், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொது நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 3 வது வார்டுக்குட்பட்ட கிறிஸ்டோபர் காலணி சாஸ்தான் கோவில் சாலை மற்றும் ஐஸ்வர்யா கார்டன் செல்லும் சாலை போன்ற பகுதிகளில் 19 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா மண்டல தலைவர் செல்வகுமார். மாமன்ற உறுப்பினர்கள் அருள் சபிதா ரெக்ஸலின். அமல செல்வன் மாநகர செயலாளர் . ஆனந்த் பகுதி செயலாளர் சேக்மீரான் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பஷீர் மாநகர சுற்று சூழல் அணி அமைப்பாளர் ராஜன், மாநகர மாணவரணி அமைப்பாளர் முகமது சாலி தி மு க நிர்வாகிகள் .சவரிமுத்து .வின்செண்ட் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் காமராஜரின் 123 வது பிறந்தநாள் விழா

குற்றாலம், ஜூலை.23-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் காமராஜரின் 123 வது பிறந்த நாள் விழா தெக்ஷன மாற நாடார் சங்க விருந்தினர் இல்லகூட்ட அரங்கில் வைத்து சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் மாநில தலைவர் அகர கட்டு லூர்து நாடார் தலைமை வகித்தார்.ராயகிரி இந்து நாடார் உறவின்முறை கமிட்டி முன்னாள் தலைவர் அம்மையப்பன் நாடார், மாநில இளைஞரணி தலைவர் ஹரிஹர செல்வ நாடார், மாநில ஒருங்கிணைப்பாளர் டி என் யூ கூட்டமைப்பு கல்வி குழு சோழ ராஜன், டி என் யூ கூட்டமைப்பு சட்ட ஆலோசகர் ராஜன் ஆசீர்வாதம் நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். டி என் யூ கூட்டமைப்பு தென்மண்டல கல்விக் குழு தலைவர் பால முருகன், டிஎன்யூ தென்மண்டல துணை தலைவர் ஜெயக்குமார், டி என் யூ தென்காசி மாவட்ட கல்விக்குழு தலைவர் சக்திவேல்



ராஜ் ஆகியோர் தொடக்க உரையாற்றினர். டி என் யூ மாநில பொதுச் செயலார் கொட்டாகுளம் கணேசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியின் துவக்கமாக குலையனேரி ஊராட்சி மன்ற தலைவர் சீதா பாலமுருகன், சாம்பவர் வடகரை பேரூராட்சி மன்ற தலைவர் சீதாலட்சுமி முத்து, திருமலாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் செண்பக கனி ரவி, டிஎன்யு கூட்டமைப்பின் மாநில மகளிர் அணி செயலாளர் ஆஷா விண்ணரசி, டி என் யூ மத்தளம்பாறை கல்வி குழு ஒருங்கிணைப்பாளர் கோபிகா ராணி ஆகியோர் குத்து விளக்கேற்றினர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தெக்ஷண மாற நாடார் சங்க தலைவர் ஆர் .கே காளிதாசன், தெக்ஷண மாற நாடார் சங்க இயக்குனர் மற்றும் கல்விக்குழு உறுப்பினர் எஸ். கே. டி. பி. காமராஜ், தொழிலதிபர் வேலன் குரூப்ஸ் கே. டி .கே .காமராஜ், தெக்ஷண மாற நாடார் சங்க இயக்குனர் கோல்டன் பி. செல்வராஜ், விருதுநகர் மாவட்ட டிஎன்யூ கல்வி குழு தலைவர் சந்திரசேகரன், திருமதி விஜயா நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நிகழ்ச்சியின் அரங்கம் முன்பாக பெருந்தலைவர் காமராஜர், ராவ் பகதூர் ரத்தினசாமி, ராவ் சாஹிப் ஆபிரகாம் பண்டிதர் நாடார், பட்டிவீரன்பட்டி சௌந்தர பாண்டியன், கொடைவள்ளல் அரிராம் சேட் ,ராஜா, பலவேசமுத்து, சி.பா ஆதித்தனார், சிலம்பு செல்வர் மா. பொ.சி, மார்ஷல் நேசமணி,தாணுலிங்க நாடார், சிவந்தி ஆதித்தனார், ராமச்சந்திரா ஆதித்தனார், சங்கரலிங்கம் நாடார், கொங்கு குணாளன் நாடார், நாகராஜன் நாடார் ,கவிஞர் மாயவநாதன் ,எஸ் கே . டி .ராமச்சந்திரன், மாவீரன் கராத்தே செல்வின், மாவீரன் வெங்கடேச பண்ணையார் ஆகியோரின் திருவுருவபடங்களை நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு நிர்வாகிகளால் திறந்து வைக்கப்பட்டு புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது தென்காசியில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு பத்மஸ்ரீ டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய திருப்பெயரை சூட்ட வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம். பெருந்தலைவர் காமராஜரால் அடிக்கல் நாட்டப்பட்ட ஜம்பு நதி மேல்மட்ட கால்வாய் திட்டத்தை விரைந்து முடிக்க தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம். சென்னையில் சிலம்பு செல்வர் தமிழகத்தின் தந்தை ம.பொ.சிக்கு அரசு சார்பில் மணிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியினை டிஎன்யூ கூட்டமைப்பின் பொருளாளர் சுப்பிரமணியன் தொகுத்து வழங்கினார். இந்த பிறந்தநாள் விழா கூட்டத்தில் ராயகிரி, கணக்கப்பிள்ளை வலசை ,கொட்டா குளம், ராமநாதபுரம், கீழப்புலியூர், ஆனைகுளம், பனையூர், வாசுதேவநல்லூர், குத்துக்கல்வலசை, இலஞ்சி, செங்கோட்டை, சுப்பிரமணியபுரம், பாபநாசம் ,கடையாலுருட்டி, விந்தன் கோட்டை, அச்சன்புதூர், சொக்கலிங்கபுரம், பால மார்த்தாண்டபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்து நாடார் உறவின்முறை கமிட்டி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் கூட்டமைப்பின் மாநில துணைத்தலைவர் செந்தூர் செல்வம் நன்றி கூறினார்.



# செம்பாக்கத்தில் 3வது மண்டலம் 41வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

செம்பாக்கம், ஜூலை.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி, 3வது மண்டலம், 41வது வார்டு சார்பில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற எஸ்.ஆர்.ராஜா அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் எஸ்.கற்பகம் சுரேஷ், பகுதி கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், வட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



# கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் அருகே எலும்புக்கூடு மீட்பு

கன்னியாகுமரி, ஜூலை.23-

ராஜாக்கமங்கலம் அருகே நீண்ட கரை பகுதியில் தனியார் கல்லூரி உள்ளது. இந்த கல்லூரிக்கு சொந்தமான இடத்தில் மனித எலும்புக்கூடு ஒன்று கிடப்பதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் அங்கு சென்று பார்வையிட்டனர். அங்கு மனித தலை, கை, கால் உள்ளிட்ட எலும்புகள் கிடந்தன.

அவற்றை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்து இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தரகுமலை திருமலை மாதா திருவிழா: பக்தியும் பாசமும் நிரம்பிய 52ஆம் ஆண்டு மகோற்சவம்

விருதுநகர், ஜூலை .23-

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தரகும்பள்ளி மலைமேல் உயர்ந்து விளங்கும் தரகுமலை திருமலை மாதா திருத்தலத்தில், 52வது ஆண்டு திருவிழா பக்தி, அதிசயம் மற்றும் மகிழ்ச்சியின் மையமாக நடைபெற்று வருகிறது.




இவ்விழாவின் தொடக்கமாக ஜூலை 19ம் தேதி, கொடியேற்ற விழா சிறப்பாக நடைபெற்றது. ஜூலை 20 முதல் 28 வரை, தினமும் காலை 11 மணிக்கு நவநாள் ஜெப ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

சிறப்பு நிகழ்வுகள். ஜூலை 27 இரவு 8.00 மணி: சப்பர பவனி ஒளி ஒலியுடன் பக்தர்களின் பேரன்பை தாங்கி நடந்த நிகழ்வு.

ஜூலை 28 காலை 11.00 மணி: சிறப்பு ஜெப ஆராதனை மாலை 5.00 மணி: கொடி இறக்கும் விழா இந்த திருவிழா நிகழ்ச்சி களை திருமலை மாதா சங்கம் அர்ப்பணிப்புடன் ஒழுங்குபடுத்தியுள்ளது.

முன்னணியில் செயல்பட்டவர்கள்:

தலைவர் சி. ஜோசப், செயலர் ஞானசெல்வராஜ், பொருளாளர் சி. மோசஸ், மற்றும் பலர் அணிவகுத்து சிறப்பாக நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

அர்ப்பணிப்பு சேவையின் உருவம் ராஜு:

35 ஆண்டுகளுக்கும் மேலாக, தன்னலமின்றி பணியாற்றும் KS. ராஜு "இது எங்கள் மலை, அம்மா எங்கள் தாய். என் வாழ்க்கை முழுதும், அம்மாவின் ஆசீர்வாதமே என் வழிகாட்டி" என பக்தியுடன் தெரிவித்தார்.

மக்களின் நம்பிக்கையும் அம்மாவின் அற்புதங்களும். பாதர் ஜோசப்பின் சிறப்பு பிரார்த்தனையின்போது,

அம்மாவின் அருளால் நிகழ்ந்த அற்புதங்களை பக்தர்கள் உருக்கமாக பகிர்ந்தனர். ஒரு சிறுமிக்கு நேரில் தரிசனம் தந்து, "நான் உன் தாய்" என்று அருளிய நிகழ்வு மக்கள் நெஞ்சில் வாழும் அற்புதமாகும்.

பக்தி நிறைந்த விருந்து எல்லோருக்கும் அம்மாவின் அன்பு. மலைமேல் அனைவருக்கும் வழங்கப்பட்ட மட்டன் விருந்து, பசியை மட்டும் போக்காமல், அம்மாவின் பரிசுத்த அன்பை உணர்த்தியது.

ஏழை, எளியர், முதியோர், குழந்தைகள் என அனைவரும் "அம்மாவின் புகழ் வாழ்க!" என நெகிழ்வுடன் வழிபட்டனர்.

மக்கள் நன்றியும் உணர்ச்சிகளும். தூய தரகுமலை மாதாவின் அருளால், வந்த குழந்தை வரங்கள், மருத்துவ அற்புதங்கள், பலரும் அனுபவித்துள்ள சாட்சிகள், மக்கள் மனங்களில் நன்றியின் கணிக்க முடியாத பெருமையை ஏற்படுத்தியுள்ளது.

"இயேசுவின் தாய் எங்கள் தாய். தரகுமலை எங்கள் மலை!" என மக்கள் முழங்கினர்.

ஒரு பக்தியின் ஒளி பரப்பும் மலை தரகுமலை திருமலை மாதா திருத்தலம்.

இது வெறும் ஒரு திருவிழா அல்ல இது நம்பிக்கையின் ஒளி, அருளின் சுவாசம், பக்தியின் விழாவாக அனைவரது நெஞ்சிலும் பதிந்துள்ளது. தரகுமலை மாதாவின் புகழ் என்றும் வாழ்க அருள் பெருகட்டும்.




■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் பேருந்து நிலையம் அருகே பிரமலைக்கள்ளர் இளைஞர் பேரவை சார்பாக தமிழக அரசு சமூக நீதி பள்ளி, சமூக நீதி விடுதிகள் என்று பெயர் மாற்றுவதை கண்டித்து மாநில பொருளாளர் குருநாதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். வரும் சட்டமன்றத் தேர்தலில் தேர்தலை புறக்கணிப்பு செய்வோம் ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161